بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

# பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாசலில் 24 ஜனவரி 2020 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று ***அப்துல்லாஹ் பின் ரவாஹா*** என்ற சஹாபியின் குறிப்புகளைக் கூறுவேன். ஹஸ்ரத் அப்துல்லாஹ்வின் தந்தை ரவாஹா பின் சாலிபா ஆவார். இவரது தாயார் பெயர் கப்ஸா பின்த் வாகித் பின் அம்ர் ஆவார். அன்ஸார்களுடைய கஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ ஹாரிஸ் பின் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா பைஅத்தே அக்பாவில் பங்கு பெற்றிருந்தார். பனூ ஹாரிஸ் பின் கஸ்ரஜின் தலைவராக இருந்தார். இவரது சுட்டுப்பெயர் அபூ முஹம்மது ஆக இருந்தது. சிலர் அபூ ரவாஹா என்றும் சிலர் அபூ அம்ர் என்றும் கூறியுள்ளார்கள்.

அன்ஸார்களுடைய ஒரு மனிதர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ரவாஹா மற்றும் மிக்தாத் இருவருக்கும் சகோதரத்துவம் ஏற்படுத்தியிருந்தார்கள். இப்னு சஅத் கூற்றின்படி அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒரு எழுத்தராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா பத்ர், உஹது, அகழ், ஹுதைபிய்யா போர், கைபர் போர், உம்ரத்துல் களா உள்ளிட்ட எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அன்னார் மூத்தா போரில் ஷஹீதானார்கள். மூத்தா போரின் தளபதிகளில் ஒருவராகவும் இருந்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: அப்துல்லாஹ் பின் ரவாஹா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். குத்பாவின்போது அன்னார் அமருங்கள் என்று கூறினார்கள். அதனைக் கேட்டு இவர் நின்ற இடத்திலேயே அமர்ந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா முடித்து வெளிவந்தபோது இவரது செய்தி சென்று சேர்ந்ததும் அன்னார் கூறினார்கள்: சாதகல்லாஹி ஹர்ஸன் அலா தவாஅல்லாஹி வதவா அதஹர் ரஸூலி. அல்லாஹ்வுக்குக் கட்டுப்படவும் அவனது ரஸூலுக்குக் கட்டுப்படவும் செய்யும் ஆர்வத்தில் அல்லாஹ் உம்மை அதிகரிப்பானாக. இதுபோன்று ஒரு சம்பவம் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது பற்றியும் வருகிறது.

அப்துல்லாஹ் பின் ரவாஹா ஜிஹாதுக்குச் செல்லும்போது முதலில் வீட்டை விட்டு வெளியேறி, இறுதியில் வீடு வந்து சேர்வார். ஹஸ்ரத் அபூதர்தா கூறுகிறார்கள்: நான் அப்துல்லாஹ் பின் ரவாஹா பற்றி குறிப்பிடாத நாளிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன். அவர் எதிரிலிருந்து வரும்போது என்னைச் சந்திக்கும்போது எனது நெஞ்சில் தமது கையை வைப்பார். சந்திக்கும்போதெல்லாம் தினமும் சந்தித்தாலும் அவ்வாறு செய்வார்.அவர் எனக்கு எதிரில் எப்போது வந்தாலும் என்னைத் தழுவுவார். அப்துல்லாஹ் பின் ரவாஹா என் நெஞ்சில் கை வைப்பார். கடந்து செல்லும்போதும் எனது தோள்களுக்கு நடுவில் கையை வைப்பார். அவர் என்னிடம், சிறிது நேரம் அமர்ந்து ஈமானைப் புதுப்பித்துச் செல்லுங்கள் என்று கூறுவார். நாங்கள் அமர்ந்தால் அல்லாஹ்வை நினைவு கூறுவார். அல்லாஹ் விரும்புபவரை செய்வார். பிறகு அப்துல்லாஹ் பின் ரவாஹா கூறுவார். இது ஈமானுடைய சபையாகும்.

ஹஸ்ரத் இமாம் அஹ்மது உடைய நூலான கிதாபுஸ் ஸுஹதில் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா யாராவது நண்பரைச் சந்தித்தால் வாருங்கள் நமது ரப்பின் மீது ஈமானைப் புதுப்பியுங்கள் என்று கூறுவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் காரணத்தினால்தான் அப்துல்லாஹ் பின் ரவாஹாவுக்கு அல்லாஹ் அத்தகைய சபைகளில் நேசத்தை ஏற்படுத்தியுள்ளான். அந்த சபைகளைப் பார்த்து மலக்குகள் பெருமிதம் அடைகிறார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைராவிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிஃமல் ரஜலு அப்துல்லாஹ் இப்னு ரவாஹா. அப்துல்லாஹ் இப்னு ரவாஹா எவ்வளவு நல்ல மனிதர்?

அப்துல்லாஹ் பின் ரவாஹாவை கைபர் வெற்றிக்குப் பிறகு பழங்கள் மற்றும் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பினார்கள். அவ்வேளையில் அப்துல்லாஹ் பின் ரவாஹா மயக்கமுறும் அளவுக்கு நோயுற்றிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை நலம் விசாரிக்க வந்தார்கள். அப்போது

அவர்கள், அல்லாஹ்வே! இவரது நேரம் இறுதியானது எனில் எளிதை ஏற்படுத்துவாயாக. இவர் மரணிக்கும் வேளை எனில் எளிதை ஏற்படுத்துவாயாக. இது இவரது மரண நேரம் இல்லை எனில் இவருக்கு நலம் வழங்குவாயாக என்று வேண்டினார்கள்.

இந்த துஆவுக்குப் பிறகு அப்துல்லாஹ்வின் ஜுரம் குறைந்தது. குறைந்ததாக உணர்ந்தார். அவர் கூறினார்: யா ரஸூலல்லாஹ்! (ஸல்) என்று தாயார் கூறினார். ஏ மலையே! எனது ஆதரவே! நீ என்னுடன் இருந்தாய் என்றார். அப்போது நான் நோயுற்றுக் கிடந்தேன். அப்போது ஒரு மலக்கு இரும்பு ஆயுதத்தை வைத்துக் கொண்டு கூறினார்: நீர் உண்மையிலேயே அப்படிப்பட்டவரா? அப்போது ஆம்! நான் அப்படிப்பட்டவன்தான் என்றால் நிச்சமாக எனக்கு அடி கிடைத்திருக்கும்.

அன்னார் ஒரு கவிஞர் ஆகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளின் வீணான கவிதைகளுக்கு பதிலடி தருவதற்காக நியமித்தவர்களுள் ஒருவராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை அவர்களது கவிதையைக் கேட்டு விட்டு, இப்னு ரவாஹா அல்லாஹ் உமக்கு நிலைத்த பாதத்தைத் தருவானாக என்று கூறினார்கள்.

ஹிஷாம் பின் உர்வா கூறினார்: அல்லாஹ் இந்த துஆவின் காரணமாக அவருக்கு உறுதியான பாதங்களை வழங்கினான். எந்த அளவுக்கு எனில் அவர் ஷஹீதானார். அவருக்காக சொர்க்கத்தின் வாசல் திறக்கப்பட்டது. அவர் ஷஹீதாகியவாறு அதற்குள் நுழைந்தார்.

இப்னு சஅத் அறிவிக்கிறார். (26:225) وَالشُّعَرَآءُ يَتَّبِعُهُمُ الْغَاوٗنَ கவிஞர்கள் வழிதவறியவாறு இருப்பவர்களைப் பின்பற்றுகிறார்கள். அப்துல்லாஹ் பின் ரவாஹா கூறி வந்தார். அல்லாஹ் நன்றாக அறிவான். நான் எத்தகையவர்களைச் சார்ந்தவன் எனில் அல்லாஹ் இந்த வசனத்தில் கூறினான். இன்னல்லதீன ஆமனூ வ அமிலுஸ்ஸாலிஹாத்தி – நம்பிக்கை கொண்டு நற்செயல் செய்பவர்களைத் தவிர, நான் அத்தகையவர்களைச் சார்ந்தவன் ஆவேன்.

மஃஜமுஷ் ஷுஅரா உடைய ஆசிரியர் எழுதுகிறார்: அப்துல்லாஹ் பின் ரவாஹா அறியாமைக் காலத்தில் கூட மரியாதைக்குரியவராக இருந்தார்கள். இஸ்லாமிய காலத்திலும் கூட அவருக்கு சிறந்த அந்தஸ்தும், மதிப்பும் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமை குறித்து அப்துல்லாஹ் ஒரு கவிதை பாடினார். அதனை அவரது மிகச் சிறந்த கவிதை என்று கூறலாம். அந்தக் கவிதை அவரது உள்ளத்து நிலையை நன்றாக எடுத்துக் கூறுகிறது. இதில் ஹஸ்ரத் அப்துல்லாஹ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விழித்துக் கூறுகிறார். அதாவது ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி தெளிவான பெரிய அடையாளங்கள் இல்லாவிடினும் கூட அன்னாரின் இருப்பே உண்மையை அறிந்து கொள்ள போதுமானது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அறியாமைக் காலத்திலேயே எழுதப் படிக்க அறிந்தவராக இருந்தார். அக்காலத்தில் அரபிகளிடம் எழுதத் தெரிந்தவர்கள் குறைவாக இருந்தனர். பத்ர் போர் முடியும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சைத் பின் ஹாரிஸாவை மதீனா நோக்கியும் அப்துல்லாஹ் பின் ரவாஹாவை அவாலி நோக்கியும் வெற்றியை அறிவிப்பதற்காக பத்ர் மைதானத்திலிருந்து அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் சைத் பின் ஜுபைர் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது ஹராமில் ஒட்டகத்துடன் நுழைந்தார்கள். அன்னார் அதிலிருந்து கொண்டே கைத்தடி மூலமாக ஹஜருல் அஸ்வதை முத்தமிட்டார்கள். அன்னாருடன் அப்துல்லாஹ் பின் ரவாஹாவும் இருந்தார்கள். அவர் அன்னாரின் ஒட்டகத்தின் மூக்கணாங் கயிற்றை பற்றியிருந்தார். அப்போது அவர் ஒரு கவிதை பாடினார். அதன் பொருள், குஃப்பார்களே! உங்கள் வழியிலிருந்து விலகுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பக்கம் நாங்கள் திரும்புவதைப் பார்த்து அடித்து அடித்து உங்கள் தலைகளை அதனிடத்திலிருந்து அகற்றி விடுங்கள்.

ஹஸ்ரத் கைஸ் பின் அபு ஹாஸிம் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ரவாஹாவிடம் கூறினார்கள். இறங்குங்கள். எமது விலங்குகளை சற்று மேயவிடுங்கள்.

அப்போது அவர், எனது ரட்சகனே! நீ இல்லையெனில் நாங்கள் நேர்வழி பெற்றிருக்க மாட்டோம். நாங்கள் தான தர்மங்கள் செய்திருக்க மாட்டோம். தொழுதிருக்கவும் மாட்டோம். எங்கள் மீது திருப்தி, நிம்மதியை இறக்குவாயாக. நாங்கள் எதிரிகளை சந்தித்தால் எங்களது பாதத்தை உறுதிப்படுத்துவாயாக. ஏனெனில் எதிரிகள் எங்கள் மீது தாக்குதல் தொடுத்துள்ளனர் என்று கூறினார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:அல்லாஹ்வே

இவர் மீது கருணை காட்டுவாயாக. அதற்கு ஹஸ்ரத் உமர் கூறினார்கள்: அது முடிவாகி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய துஆ அவர் மீது உறுதியாகி விட்டது.

ஹஸ்ரத் உபாதா பின் ஸாபித் மூலமாக அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவை நலம் விசாரிக்கச் சென்றபோது அவரால் தமது படுக்கையிலிருந்து எழ முடியவில்லை.

அன்னார் கூறினார்கள்: இந்த உம்மத்தின் ஷஹீதுகள் யார் என்று உமக்குத் தெரியுமா? மக்கள், முஸ்லிம்கள் கொல்லப்படுவது ஷஹாதத் ஆகும் என்றனர். அவ்வாறெனில் எனது உம்மத்தில் ஷஹீதுகள் மிகக் குறைவாகவே இருப்பர் என்று அன்னார் கூறினார்கள்.

பிறகு கூறினார்கள்: முஸ்லிம்கள் கொல்லப்படுவதும் ஷஹாதத் ஆகும். வயிற்று நோயால் மரணிப்பது ஷஹாதத் ஆகும். தண்ணீரில் மூழ்கி மரிப்பது ஷஹாதத் ஆகும். ஒரு பெண் பிரசவ வழியில் மரித்தால் அது ஷஹாதத் ஆகும்.

ஹஸ்ரத் உர்வா பின் ஸைத் அறிவிக்கிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூத்தா போரில் ஸைத் பின் ஹாரிஸாவைத் தளபதியாக நியமித்தார். இவர் ஷஹீதாகி விட்டால் ஜாபர் பின் அபூதாலிப் அவரது இடத்திற்கு வரட்டும் என்றார்கள். பிறகு ஜாபிர் ஷஹீதானால் அப்துல்லாஹ் பின் ரவாஹா தளபதியாகட்டும் என்றார்கள். அப்துல்லாஹ்வும் ஷஹீதாகி விட்டால் முஸ்லிம்கள் தாம் விரும்புபவரை படைத்தலைவராக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அப்போது இந்த கவிதையை படித்தார்கள்: அதாவது நான் ரஹ்மானாகிய இறைவனிடம் மன்னிப்புக் கேட்கிறேன். வாளினால் பரந்த அளவில் வீசி போர் செய்யும் வாய்ப்பை வழங்குவானாக. அதனால் புத்தம் புதிய இரத்தத்தை ஓட்டுபவனாக இருக்க வேண்டும். அதிலிருந்து நுரை பொங்கி எழ வேண்டும். இரத்த தாகம் உடையவரின் கைகளால் எனது உடலுறுப்புகள் தாக்கப்பட வேண்டும். எனது குடலும் ஈரலும் துண்டாக வேண்டும். எனது மண்ணறையைக் கடந்து செல்பவர்கள் போரில் சென்றவரே. அல்லாஹ் உமக்கு நன்மையைத் தருவானாக. அந்த இறைவன் உம்மை மேலோங்கச் செய்து விட்டான் என்று கூற வேண்டும்.

பிறகு அப்துல்லாஹ் பின் ரவாஹா ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, அவர் அன்னாரிடம் விடைபெற்றார். மூத்தா என்ற இடத்தில் ரோமானியர்களைச் சார்ந்த மூன்று லட்சம் எண்ணிக்கையை கொண்ட படையை முன்லிம்கள் எதிர் கொண்டனர். முஸ்லிம்களின் எண்ணிக்கை வெறும் 3000 ஆக இருந்தது. முஸ்லிம் தளபதிகள் ஒருவர் பின் ஒருவராக ஷஹீதானார்கள். அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவர்களின் ஷஹாதத்தைப் பற்றி அறிவித்துக் கொடுத்தான்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைத், ஹஸ்ரத் ஜாஃபிர், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா ஆகியோர் ஷஹீதாக்கப்பட்ட செய்தியை மக்களிடம் தெரிவித்தார்கள். அன்னார் கூறினார்கள்: ஸைத் கொடியை வாங்கினார்; ஷஹீதானர். பிறகு ஜாஃபிர் கொடியை வாங்கினார்; அவரும் ஷஹீதானார். பிறகு அப்துல்லாஹ் பின் ரவாஹா வாங்கினார்; அவரும் ஷஹீதானார். அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. பிறகு அவர்கள் கூறினார்கள்: பிறகு கொடியை அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாள் வாங்கியது. அவர் மூலமாக அல்லாஹ் வெற்றியைத் தந்தான் என்றார்கள்.

ஹஸ்ரத் உர்வா கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கழுதையில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். தமக்குப் பின்னால் உஸாமாவை அமர வைத்திருந்தார்கள். ஸைது பின் உபாதாவை நலம் விசாரிப்பதற்காக பனூ ஹாரிஸ் பின் கஸ்ரஜ் உடைய கோத்திரத்தாரிடம் சென்றார்கள். அன்னார் ஒரு சபையைக் கடந்து சென்றபோது அந்த சபையில் அப்துல்லாஹ் பின் ரவாஹாவும் இருந்தார். சபையில் புழுதி கிளம்பியது. அப்துல்லாஹ் பின் உபை தமது போர்வையால் மூக்கைப் மூடியவாறு, எங்கள் மீது தூசீயை கிளப்பாதீர் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். நின்று வாகனத்தில் இருந்து இறங்கினார்கள். அவர்களை அல்லாஹ்வை நோக்கி அழைத்தார்கள். திருக்குர்ஆனை ஓதினார்கள். அப்துல்லாஹ் பின் உபை, மனிதரே! இது சரியில்லை. நீர் சொல்வது உண்மை என்றாலும் எமது சபையில் வந்து தொல்லை கொடுக்காதீர். உமது இருப்பிடத்திற்குச் செல்லும். உம்மைத் தேடி வருபவர்களிடம் கூறும் என்று கூறினான். அப்போது அப்துல்லாஹ் பின் ரவாஹா கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! எமது சபைகளுக்கு வாருங்கள். நாங்கள் அதனை விரும்புகிறோம் என்றார்.

ஹஸ்ரத் அபூதர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் ரமலான் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கடும் வெயிலில் வெளியில் வந்தோம். கடும் வெயிலாக இருந்தது. நாங்கள் தலையைச் சூட்டிலிருந்து

காப்பாற்றுவதற்காக துணியால் மூடிக் கொண்டோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அப்துல்லாஹ் பின் ரவாஹா இருவரையும் தவிர நாங்கள் யாரும் நோன்பு நோற்கவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மஸ்ஜிது நபவி கட்டப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தவாறு அடிக்கல் நாட்டினார்கள். அவ்வப்போது பணிகளைத் தாமும் செய்து வந்தார்கள். சில நேரங்களில் சஹாபாக்கள் கற்களை எடுத்து வரும்போது அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் கவிதையைப் பாடி வருவார்கள். அதாவது எங்களது அல்லாஹ்வே! கூலி என்பது மறுமையின் கூலியே ஆகும். நீ உனது அருளால் அன்ஸார் மற்றும் முஹாஜிரீன் மீது உனது ரஹ்மத்தை இறக்குவாயாக. சஹாபாக்கள் இந்தக் கவிதையைப் படிக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமும் அவர்களது குரலுடன் தமது குரலையும் இணைத்துக் கொண்டார்கள். இவ்வாறு நீண்ட கால உழைப்பிற்குப் பிறகு பள்ளிவாயில் முழுமை பெற்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது நான் ஒரு மர்ஹூமைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அது கண்ணியத்திற்குரிய லதீஃப் அஹ்மது குறைஷி சாஹிப் உடையதாகும். இவர் மன்சூர் அஹ்மது குறைஷி சாஹிபுடைய மகன் ஆவார். 19 ஜனவரி 2020 அன்று மதியம் தமது வீட்டில் தமது சுமார் 80 வது வயதில் இறை நியதியால் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

1937 –ல் இவரது தந்தையார் குறைஷி சாஹிப் முஸ்லிஹ் மவ்வூது கையில் பைஅத் செய்திருந்தார். இவரது தாயார் மன்சூரா புஷ்ரா சாஹிபா அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள். 1968 –ல் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், டாக்டர் சாஹிபிடம் எப்போது எங்களிடம் வருகிறீர்கள்? என்று கேட்டார்கள். டாக்டர் சாஹிப் உடனே, நீங்கள் கட்டளையிடுங்கள் என்றார். உடனே மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவ்வாறென்றால் வாருங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு அவர் இங்கிலாந்தை விட்டு விட்டு ரப்வா வந்தார். ரப்வாவின் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் டாக்டர் சாஹிப் நியமிக்கப்பட்டார். பிறகு மிக நீண்ட காலம் அங்கு பணி செய்தார். 11 ஜூலை 1983 –ல் Chief Medical Officer ஆக ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் 30 வருடங்கள் தொண்டாற்றினார்கள்.

இவரது மனைவி சில நாட்களுக்கு முன் வஃபாத் ஆகி விட்டார். அப்பெண் மவ்லானா அப்துல் மாலிக் கான் உடைய மகள் ஆவார். நான் குறிப்பிட்டேன். கடந்த ஜனாஸா நான் அவருக்காக தொழ வைத்தேன். அதற்கு அடுத்த இரு நாட்களுக்குப் பிறகு இவரது மரணம் நிகழ்ந்துள்ளது. இவரது நினைவாக இவரது மனைவியின் குறிப்பில் கூறினேன். இவருக்கு 3 மகன்கள் 2 மகள்கள் இருக்கிறார்கள்.

இவரது மகன் டாக்டர் அதாவுல் மாலிக் கூறுகிறார்கள்: நான் நினைவு அறிந்ததிலிருந்து தந்தையார் ஒருநாளும் தஹஜ்ஜுத் தொழுகையை விட்டதில்லை. அதுபோன்று எங்களது தாயாரும் கூறுகிறார். திருமணமான முதல் நாளிலிருந்து தஹஜ்ஜுத் தொழுது வந்தார். 50 ஆண்டுகளாக தினமும் தொய்வுறாமல் தஹஜ்ஜுத்தைப் பேணி வந்துள்ளார்.

இரண்டாவது மகளாகிய டாக்டர் மஹ்மூது குறைஷி முஹம்மது அஹ்மது அஹ்மது மஹ்மூது கூறுகிறார்: மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் இவரைப் பற்றி இவர் வெறும் டாக்டர் அல்ல. துஆ செய்யும் டாக்டர் ஆவார் என்று கூறினார்கள். ஒவ்வொரு நோயாளிக்காகவும் துஆ செய்வார்கள். சீட்டும் எழுதும் முன் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் ஹுவஸ் ஷாஃபி என்றும் எழுதி விட்டு மருந்து எழுதுவார்கள்.

அல்லாஹ் இவருக்கு ரஹ்மத் மற்றும் மக்ஃபிரத்தின் நடைமுறையைக் காட்டுவானாக. இவரது பிள்ளைகளுக்கு பொறுமை மற்றும் தைரியம் வழங்குவானாக. இவர்களது தாயார் நோயுற்றிருக்கின்றார்கள். அல்லாஹ் அவர்கள் மீது கருணையும் அருளும் வழங்குவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஜாமுத்தீன்**